

# மற்றுமொரு மாசறு விருது!

தி.மு.கழகத்தின் பவளவிழா ஆண்டு! இந்த ஆண்டின் முப்பெரும் விழா சீரோடும் சிறப்போடும் நடத்தப்பட இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியங்களை உயிரென மதித்து, அவற்றை முன்னெடுத்துச் செல்வதிலும், இந்த மக்கள் இயக்கத்தை வளர்த்தெடுப்பதிலும் முனைப்புக் காட்டி, 'இந்தக் கழகத்தால் தனக்கு என்ன லாபம்' என்று கருதிடாது, 'தன்னால் கழகத்துக்கு என்ன லாபம்' என்ற எண்ண ஓட்டத்தோடு செயல்பட்டுக்கொண்டிருக்கும் செயல் வீரர்களை, தியாக மறவர்களைப் போற்றிப் பாராட்டியும் ஆண்டுதோறும் விருதுகள் வழங்கியும் கழகத் தலைமை சிறப்பிக்கிறது.













1985ஆம் ஆண்டு தலைவர் கலைஞரால் தொடங்கப்பட்ட இந்த முப்பெரும் விழாவினை தலைவர் கலைஞருக்குப் பின் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள தளபதி ஸ்டாலினும் தொய்வின்றி தொடர்ந்து நடத்தி வருகிறார்.

தொடக்கத்தில் பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது ஆகிய மூன்று விருதுகள் மட்டுமே கழகத்திற்காக உழைத்தவர்களுக்கு, பாடுபட்டவர்களுக்கு, பணியாற்றியவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தன. 2009-ஆம் ஆண்டு முதல் பாவேந்தர் விருதும் சேர்த்துக்கொள்ளப்பட்டது. அதன்பின்னர், 2018-ஆம் ஆண்டு முதல் இனமானப் பேராசிரியர் விருதும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு முதல், வரும் ஆண்டுகளில், 'கழகத் தலைவர் தளபதி ஸ்டாலின் பெயரில் விருது வழங்கப்படும்' என தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.

தளபதியின் பெயரால் வழங்கப்படும் விருதை தஞ்சை மாவட்ட இயக்கத் தூண்களில் ஒருவராகத் திகழும் திரு.பழனிமாணிக்கம் பெற இருக்கிறார்!

**தலைவர் கலைஞருக்குப் பிறகு தமிழக அரசியலில் தி.மு.க. வரலாற்றில் வெற்றிடம் உருவாகும் என்று கணித்தவர்கள் கணிப்பை உருத்தெரியாமல் ஆக்கி 'வெற்றிடமல்ல - தி.மு.க.வின் தொடர் வெற்றி இடம்' எனும் வகையில் கழகத்தின் வலிவை, கட்டுக்கோப்பை, தமிழ்நாட்டில் மட்டுமின்றி அதன் எல்லைகடந்து இந்தியத் திருநாட்டிலும் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறார் தளபதி!**

தளபதி ஸ்டாலினுக்கு ஒரு முப்பெரும் விழாவில் 'கலைஞர் விருது' வழங்கப்பட்டபோது, "நான் பெறுவது கலைஞர் விருது என்றாலும், எனக்குக் கிடைத்திருப்பது பெரியார், அண்ணா, கலைஞர் ஆகிய மூவரின் விருது! கலைஞரை இன்றைய தினம் பெரியார் வடிவில், அண்ணா வடிவில் எல்லாரும் காண்கிறார்கள்! அதனால் கலைஞர் விருது என்பது இந்த மூவரும் இணைந்த விருது" என்று பெருமிதம் கொண்டார்!

அதேபோல 'ஸ்டாலின் விருது' பெறும் பழனி மாணிக்கம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்!

திராவிட இயக்கத்தின் நடமாடும் கலைக் களஞ்சியமாக இன்று திகழ்ந்து கொண்டிருக்கிற ஆசிரியர் வீரமணி அவர்கள்,

"இன்றைக்கு தந்தை பெரியார் இல்லை; பேரறிஞர் அண்ணா இல்லை; முத்தமிழறிஞர் கலைஞர் இல்லை. ஆனால் மூவரின் மொத்தவடிவமாய் மு.க.ஸ்டாலின் அவர்கள் உள்ளார்கள். மூவரின் கொள்கை உறுதி, போர்க்குணம், அஞ்சாமை, அயரா உழைப்பு, மக்களின் நலனை எண்ணுதல், அதற்காக செயலாற்றல், சமூக நீதி காத்தல், தமிழ், தமிழ்நாடு, தமிழர் வளர்ச்சிக்குப் பாடுபடல் என்று எல்லாவற்றிலும் மேலோங்கி நிற்கிறார்" – என தளபதி ஸ்டாலினைப் படம்பிடித்துள்ளார். 'தகைமைசால் தமிழர்' ஆசிரியர் வீரமணி அவர்களின் பாராட்டு மிகமிக வெளிப்படையானது; உள்ளார்ந்தது! பதவி பவிசுகளை எதிர்பார்த்த பாராட்டல்ல அது! ஏனென்றால் அவைகளைத் துச்சமென மதித்துச் செயல்படுபவர் அவர்! அத்தகைய கொள்கை வேங்கை வீரமணி அவர்களால் பாராட்டப்பட்ட தளபதி ஸ்டாலின் பெயரால் 'விருது!'

> **"திரு.ஸ்டாலின் கொள்கையில் தெளிவு, சொல்லினில் கனிவு, கடமையில் உறுதி, கண்ணியம் குன்றாமை, காலந்தவறாமை ஆகியவற்றால் சமுதாயத்தின் மதிப்பினைத் தேடிக் கொண்டவர். தந்தையின் புகழொளியில் பெருமைகொள்ளும் உரிமையும், வாய்ப்பும் பிறப்புரிமையால் பெற்றிருப்பினும், தகுதியினால் பெருமை கொண்டு, தியாகத்தால் உரிமை பெற்று, தொண்டினால் பதவிபெற்று, சாதனையால் புகழ்பெற்றவர் ஸ்டாலின். எண்ணித் துணிவது, துணிந்ததை உரைப்பது, உரைப்பதைச் செய்வது, விளைவினை ஏற்பது என்ற பழக்கத்தால் பொதுத் தொண்டில் வெற்றி நடைபோடுபவர்".**

யார் என்ன நினைப்பார்களோ என்பதைப் பற்றிக் கவலைப்படாது மனதில் பட்டதை 'நியாயம்' என்று எண்ணியதை எதற்கும் கவலைப்படாது சொல்லக்கூடிய பேராசிரியர் பெருந்தகை; ஸ்டாலினை ஆழமாகக் கணித்து உதிர்த்த புகழாரம் இது!

அத்தகைய ஆற்றல்மிகு தலைவன் பெயரால்தான் ஸ்டாலின் விருது.

**"ஸ்டாலின் தொட்டிச் செடிபோல் தூக்கி வைக்கப்பட்ட மரமல்ல; இந்த மண்ணுக்குள் வேர்களைச் சொந்தமாக வீசி வளரும் சுயம்பு" – என்று கவிப்பேரரசு வைரமுத்தால் பாராட்டப்பட்டவர். அந்தச் சுயம்பு பேரில் ஒரு விருது.**

> **"இங்கே அண்ணாவையும், கலைஞரையும்; அவரையொட்டி ஸ்டாலினையும் தமிழக அரசியல் மட்டுமல்ல - அகில இந்திய அரசியலே ஏற்றுக் கொள்கின்றதென்றால் என்ன காரணம்?**
>
> **ஜாதித் தலைவர்கள் கொச்சைப்படுத்துவதுபோல, அவர்கள் மிகச் சிறுபான்மை இனத்தில் பிறந்தவர்கள் தான்; மறுக்கவில்லை. ஆனால் மிகப் பெரும்பான்மை இன மக்கள் அவர்களை அங்கீகரிக்கிறார்கள்; உயருகிறார்கள். காரணம் உழைப்பு, தொண்டு"**

– என மூத்த பத்திரிகையாளர் சோலை கடந்த 2010-ஆம் ஆண்டே, இன்றும் சில ஜாதித்தலைவர்கள் கொச்சைப்படுத்திக் கொண்டிருக்கும் செயலுக்கு ஆணித்தரமான பதிலைத் தந்துள்ளார்! அத்தகைய உழைப்பு - தொண்டுள்ளம் இவற்றை; வளர்கின்ற காலத்திலேயே தன்வசமாக்கி வளர்ந்தவர் தலைவர் ஸ்டாலின்.

"உழைப்பு; உழைப்பு; உழைப்பு - இதுதான் ஸ்டாலின்" என்றார் கலைஞர். அத்தகைய உழைப்பே, இன்று தலைமைப் பொறுப்பேற்று ஆயிரம் காலத்துப் பயிராம் இந்த இயக்கத்தைக் காத்து நிற்கிறது!

தலைமைப் பொறுப்பேற்றபின் சந்தித்த தேர்தல்களில் எல்லாம் கழகத்துக்கு அடுத்தடுத்து வெற்றிகளைக் குவித்து, ஆறாம் முறையாக கழக ஆட்சியை அமைத்து "முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினாகிய நான்..." எனும் கம்பீரக் குரலில் உறுதிப்பிரமாணம் எடுத்தபோது, ஒட்டுமொத்தத் தமிழகம் மட்டுமின்றி நாடே கொடுந்தொற்றின் பிடியில் அகப்பட்டு விழி பிதுங்கிக் கிடந்த நேரம்! பதவி ஏற்றபின் அடுத்த கணமே, நோயின் கொடூரப் பிடியில்

முரசொலி செல்வம்

சிக்கித்தவித்த மக்களைக் காத்திட அவர் சுழன்று சுழன்று பணியாற்றியபோது - ஸ்டாலின் என்ற மனிதரை தங்கள் தலைவராக, முதல்வராக மட்டுமின்றி அதற்குமேல் ஏதோ ஒரு சக்தியாகக் காணத் தொடங்கினர் மக்கள்!

அதனைத் தொடர்ந்து பெய்த வரலாறு காணா மழை வெள்ளத்தில் இரவு பகல் பாராது 'வார் ரூம்' சென்று நிலைமையை நேரடியாகச் சோதித்தறிதல், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று மக்களுக்கு ஆறுதல், வரும் காலங்களில் இத்தகைய பெரும் பாதிப்புகளைத் தடுத்திட அதிகாரிகளோடும் துறை அமைச்சர்களோடும் கலந்தாய்வு என ஓய்வின்றி ஆற்றிய அரசுப் பணிகள் மூலம் தமிழக மக்களின் இதயங்களில் சிம்மாசனம் போட்டு அமர்ந்தார்.

**தமிழினத் தலைவர் கலைஞர் செதுக்கித் தந்த புதிய தமிழகத்துக்கு மேலும் மெருகூட்டும் வகையில் தமிழ்நாட்டுப் பெண்கள் முன்னேற்றத்துக்காக மாணவ - மாணவிகள் படித்தறிய உரிமைத் தொகைகள் மட்டுமின்றி பல துறைகளிலும் சுடர்விட 'நான் முதல்வன்' போன்ற உயரிய திட்டங்கள்... அது மட்டுமல்ல; அவரே ஒருமுறை குறிப்பிட்டபடி, அவர் ஒவ்வொரு முறையும் மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து அதற்கான கோப்புகளில் கையெழுத்திடும்போது அவரது மனக்கண்ணில் தோன்றிடும் கோடிக்கணக்கான மலர்ந்த முகங்கள், அவரை எவரும் எட்ட முடியாத உயரத்துக்கு உயர்த்திக் கொண்டேயிருக்கிறது.**

பேருந்தில் கட்டணமின்றிப் பயணிக்கும் பெண்கள், மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையாக பெறும் குடும்பத் தலைவிகள், மாதம் ஆயிரம் ரூபாய் பெற்றிடும் அரசுக் கல்லூரிகளில் பட்டப்படிப்பு பெறும் மாணவ-மாணவிகள் அனைவரும் தங்கள் குடும்பத்துத் தலைமகனாக எண்ணி தளபதி ஸ்டாலினைக் கொண்டாடிக் குதூகலிக்கின்றனர்!

'தலைவாரிப் பூச்சூடி உன்னை... பாடசாலைக்குப் போ என்று சொன்னாள் உன் அன்னை... சிலைபோல ஏனங்கு நின்றாய்... நீ சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்!... 'மலை வாழை அல்லவோ கல்வி... அதை வாயார உண்ணுவாய் போ என் புதல்வி...' எனக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்!

அந்தக் கல்வியை நமது இளஞ்சிறார்கள் நிம்மதியோடு பெற்றிட 'தமிழக முதல்வரின் காலை உணவுத்திட்டம்' என 'இந்தத் தமிழ் மண்ணில் மகிழ்ச்சி ஒன்றே தவழ்ந்திட வேண்டும்; வளர்ச்சி ஒன்றே மேலோங்கி நிற்க வேண்டும்' – என்ற ஒற்றைநோக்கோடு தூங்கி எழுந்ததுமுதல், மீண்டும் தூங்கச் செல்லும்வரை மட்டுமின்றி, தூக்கத்திலும் இந்த நோக்கத்தின் கனவுகளோடு செயல்பட்ட தமிழினத் தலைவர் கலைஞரின் வாரிசாகச் செயல்பட்டு தமிழ்நாட்டை 'நம்பர் 1' மாநிலமாகத் திகழச் செய்து கொண்டிருக்கும் தளபதி ஸ்டாலின் பெயரால் முப்பெரும் விழாவில் விருது.

**அண்ணா, கலைஞருக்குப் பிறகு இன்று கண்டங்கள் தாண்டி வாழும் தமிழர்கள் தங்களது காவல் அரணாக தளபதி ஸ்டாலினைக் காண்கின்றனர் என்பதற்கு அவர் முதலீட்டாளர் சந்திப்புக்கு வெளிநாடுகள் சென்றபோது அங்குள்ள தமிழர் தந்த உற்சாக வரவேற்பே சாட்சியங்களாகத் தோன்றுகின்றன.**

53 ஆண்டுகளுக்கு மேலாக அமெரிக்காவின் சிகாகோவில் வாழும் புகழ்மிகு மருத்துவர் சோம. இளங்கோவன், தான் அறிந்த மட்டும் சிகாகோ நகரில் தமிழர்கள் இந்த அளவு பெருமளவில் திரண்டு வரவேற்பளித்த முதல் நிகழ்வாகவே தமிழக முதல்வர் ஸ்டாலினுக்குத் தந்த வரவேற்பை வருணிக்கிறார்!

ஆம்; உலகத் தமிழர்களின் உள்ளங்களில் சிம்மாசனம் போட்டு ஆட்சி செய்தார் அண்ணா. அண்ணாவின் அடியொற்றி நடந்த கலைஞர் அவர்களது காவல் தெய்வமாகவே காட்சியளித்தார். இன்றைய தினம் கழகத் தலைவர் தளபதி, அவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிறார்!




கழகத்தின் பவள விழா ஆண்டில் நடைபெறும் முப்பெரும் விழா மேலும் பொலிவு பெற்றிடும் வகையில் 'மு.க.ஸ்டாலின் விருது' அறிவிக்கப்பட்டுள்ளது.

**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், பாவேந்தர் பாரதிதாசன், பேராசிரியர் அன்பழகனார் ஆகியோர் பெயரில் இதுவரை வழங்கப்பட்ட விருதுகளின் மணிமுடியில் மேலும் ஒளிவீசும் வைரக் கல்லாக 'மு.க.ஸ்டாலின் விருது.'**

ஆம்; உழைப்பு; உழைப்பு; உழைப்பு என்ற பேரால் உழைப்புக்குத் தரப்பட இருக்கும் தகுதிமிகு விருது! அந்த அறிவிப்பின் முதல் விருதினைப் பெற்றிடும் தஞ்சையின் கழகத் தூண் பழனி மாணிக்கத்துக்கு வாழ்த்துகள்!